# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No.3063/2020

Deposition of witness for

PW1

Name : Tmt. Devandhiri

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of October 2022 .

---

**10.10.2022**

குறுக்கு விசாரணை

நான்˙ 2003ல் திருமணமானதிலிருந்து விழுப்புரத்தில் உள்ள என்னுடைய கணவர் வீட்டில் குடியிருக்கிறேன். முதல் வாதிக்கு 1997ல் திருமணமானது. திருமாண புதிதில் அவர் விருகம்பாக்கத்தில் உள்ள கணவர் வீட்டில் குடியிருந்தார். தற்போது முதல் வாதி குன்றத்தூரில் குடியிருக்கிறார். முதல் பிரதிவாதிக்கு 2 சிறுநீரகங்களும் செயல் இழந்துவிட்டதால் அவருடைய மகனுடன் போரூரில் பெரியமனுச்சியும் குடியிருக்கிறார். 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருக்கிறார். அவர் ஆட்டோ ஓட்டுகிறார். 2ம் பிரதிவாதி பிறந்தது முதலே தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார். 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், மதுரவாயிலில் தான் குடியிருக்கிறார் என்றும் சொன்னால் தவறு. 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்து வந்தவரை 5வது பிரதிவாதி வெட்டிவிட்டதால் அவரை கவனிப்பதற்கு ஆல்யில்லாமல் அவருடைய தங்கை பூரணி வீட்டில் மதுரவாயிலில் சமீபகாலமாக குடியிருக்கிறார். மேற்சொன்ன பூரணி 2ம் பிரதிவாதியின் மனைவி பிரேமாவின் தங்கை. 1985ல் குடிசை மாற்று வாரியம் தாவா சொத்தினை என் தாயார் மரியால் பெயரில் ஒதுக்கிகொடுத்தது. கிரைய தொகை எவ்வளவு பத்திரத்தில் போடப்பட்டிருந்தது என்றால் அது குறித்து தெரியாது. என் தாயார் பெயரில் மேற்படி சொத்து வழங்கப்படுவதற்கு முன்னரும் என் தாயார் அதே வீட்டில் குடியிருந்து தான் 5 குழந்தைகளையும் பெற்றார். என் தாயார் பெயரில் சொத்து வழங்கப்படுவதற்கு முன்னர் அது கீற்றுகொட்டாய் குடிசையாக இருந்தது. இராஜேந்திரன் என்னுடைய அண்ணன். இராஜேந்திரன் உயிருடன் இருந்தவரையிலும் மேற்சொன்ன வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இராஜேந்திரனின் மனைவி என்றால்

அவர்களுக்கு இந்துமுறைபடி திருமணமாகவில்லை. 3ம் பிரதிவாதி இராஜேந்திரனின் மனைவி என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாரதாவின் உடன்பிறந்த சகோதரி சரளா என்றால் சரிதான். சரளாவையும் இராஜேந்திரன் திருமணம் செய்தார் என்றால் தவறு. சரளா 3ம் பிரதிவாதியுடன் தாவா சொத்தில் குடியிருக்கிறார் என்றால் தெரியாது. மணிமேகலை, மணிகண்டன், மதன் யார் என்றால் அவர்கள் சரளாவின் மக்கள். மேற்சொன்ன மூவரும் இராஜேந்திரனின் மக்கள் என்றும் அவர்களை இந்த வழக்கில் சேர்க்காதது வழக்கினை பாதிக்கிறது என்றும் சொன்னால் தவறு. இராஜேந்திரன் தாவா சொத்தில் வைத்து தான் இறந்தார். தாவா சொத்தில் ஓட்டு வீடு இருந்தது. முதல் பிரதிவாதி தான் ஓலை வீட்டை மாற்றி ஓட்டு வீடாக கட்டினார். ஆனால் சமீபத்தில் 5ம் பிரதிவாதி ஓட்டுவீட்டினை உடைத்துவிட்டார். 1ம் பிரதிவாதி தான் வீட்டு வரி செலுத்திவந்தார் அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 தாவா சொத்திற்கான ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் கண்டு கட்டணங்களை முதல் பிரதிவாதி செலுத்தினார். வா.சா.ஆ.5 ல் அவரது கையொப்பம் கண்டுள்ளது. வா.சா.ஆ.5 ரசீதுகள் அனைத்துமே 31.7.2017ல் செலுத்தப்பட்டுள்ளது என்றால் 7 ரசீதுகள் மேற்சொன்ன தேதியிட்டது. வா.சா.ஆ.5 ல் 2 ரசீதுகள் 21.2.2000 தேதியிட்டது. 21.2.2000 தேதியிட்ட ரசீதில் செலுத்துபவரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ராஜேந்திரன் தான் வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றும் 2017ல் முதல் பிரதிவாதி வீட்டு வரி விதிப்பு அட்டையை எடுத்து சென்று முதல் பிரதிவாதி வீட்டு வரி செலுத்தினார் என்றால தவறு. ராஜேந்திரன் வேலை பார்பதில்லை என்பதால் அவருக்கு வருமானமே இல்லை. முதல் பிரதிவாதி மதுரவாயிலில் தான் குடியிருந்தார் என்றும் சென்னையில் வெள்ளம் ஏற்பட்ட 2015ல் தான் முதல் பிரதிவாதி தாவா சொத்தில் வந்து குடியேறினார் என்றும் சொன்னால் தவறு. என்னுடைய தகப்பனார் வீரப்பனின் பூர்வீகம் முண்டையம்பாக்கம். பூர்வீகத்தில் தகப்பனாருக்கு சொத்து எதுவும் இல்லை. என் தகப்பனார் பஞ்சம்பிழைக்க சென்னை வந்தவர். முண்டையம்பாக்கத்தில் என் தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் இருந்தது என்றும், அவை வாதிகளாகிய எங்களுக்கும் முதல் பிரதிவாதிக்கும் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றும் அவற்றை நாங்கள் மூவரும் சேர்ந்து விற்றுவிட்டோம் என்றும் தற்போது தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கினை உரிமையில்லாமல் தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் தவறு. தாவா சொத்து பொறுத்து தாயார் பெயரிலோ வேறு யார் பெயரிலோ கிரைய பத்திரம் வழங்கப்பட்டதா என்று தெரியாது. தாவா சொத்து பொறுத்து என் தாயார் பெயரில் கிரைய பத்திரம் ஏற்படாத நிலையில் பாகம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்தது நிலைக்கதக்கதல்ல என்றால் தவறு. நானும் 1ம் வாதியும் மற்றும் பிரதிவாதிகளும் சேர்ந்து எங்கள் பெயரில் கூட்டாக கிரைய பத்திரம் பெறுவதற்காக குடிசை மாற்று வாரியத்தில் அனுகியபொழுது 3ம் பிரதிவாதி அவரது தங்கை சரளாவிற்கும் ஒரு பாகம் ஒதுக்குமாறும் கேட்டது தான் பிரச்சனை ஆனது அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்யும் அவசியம் ஏற்பட்டது. தாவா சொத்தில் 3 அறைகளும், 2 சமையல் அறைகளும், 2 ஹாலும் உள்ளது. அதனுடைய மொத்த அளவுகலோ விஸ்தீரனங்களோ தெரியாது. மேற்சொன்ன வீட்டில் தான் நாங்கள் பாகம் கோருகிறோம். குடும்ப ஏற்பாட்டின்படி எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் விழுப்புரத்தில் உள்ள சொத்துக்கள் எங்கள் பாகத்திற்கு

ஒதுக்கப்பட்டது என்றும் தாவா சொத்து ராஜேந்திரன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும் அதில் அவரே வீடு கட்டிக்கொண்டார் என்றும் சொன்னால் தவறு. ராஜேந்திரன் உயிருடன் இருந்தவரையிலும் தாவா சொத்தின் பராமறிப்பு அவரே செய்துவந்து வரிவகையாராக்களை செலுத்தி வந்தார் என்றால் தவறு. ராஜேந்திரன் 2009 ல் இறந்தார். ராஜேந்திரன் இறந்ததற்கு பின்னிட்டு 1,2 பிரதிவாதிகள் வலுக்கட்டாயமாக டி.வி. மற்றும் பிரிஜ்களை தாங்கள் தாவா சொத்தில் குடியிருப்பதுபோல காட்டுவதற்காக வேண்டி கொண்டு வந்து வைத்ததாக சொன்னால் 2003ல் மேற்சொன்ன வீட்டில் வைத்து அண்ணன்கள் மூவரும் சேர்ந்து தான் திருமணம் செய்துவைத்தனர். 1ம் பிரதிவாதி கட்டிட காண்டிரக்டர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்சொன்ன தகுதியில் சொத்தினை அபகரிக்க வேண்டி எங்களை துண்டிவிட்டு நாங்கள் கூட்டுசதியாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. ராஜேந்திரனுக்கு சரளா மூலம் பிறந்த 3 மக்களை இந்த வழக்கில் பார்ட்டிகளாக சேர்க்காதினால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் தவறு. தாவா சொத்து குடியிருக்கும் வீடு என்பதினால் பாகபிரிவினைக்கு ஏற்புடையதல்ல என்றால் தவறு. வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and acknowledged by the witness to be correct by affixing his signature.

10.10.2022

III Addl. Sessions Judge.
III Addl. Court.